உடைந்த உள்ளங்களுக்கு

# இயேசுவின் சமாதானம்

வருடம் 12 மாதம் 6



## இயேசு வல்லமையுள்ள தேவன்

டிசம்பர் 2013

ஏ.எஸ்.வி. ராபின்

“Lord will give you The Desire of your Heart” Psalms 37 : 4

# JESUS REDEEMS

Nalumavadi - 628 211, Thoothukudi Dt. Tamilnadu, India



Mohan C. Lazarus

## வாழ்த்துரை

சகோதரி பொற்செல்வி ராபின் அவர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன்!

20 வருடங்களாக கர்த்தருடைய பணிகளை நிறைவேற்றி வருகிற அன்பு சகோதரி அவர்களை நான் நன்கு அறிவேன். சகோதரி அவர்கள், தேவனுக்காக பக்தி வைராக்கியமும், ஆத்தும பாரமும் கொண்டவர்கள். தேவன் மீது கொண்ட அன்பினால், இயேசுவின் சமாதானம் என்ற பெயரில் இடைவிடாமல் தேவப் பணியை நிறைவேற்றி வருகிறார்கள்.

தேவன் கொடுத்த தரிசனத்தின்படி இவர்கள் வெளியிடுகிற இயேசுவின் சமாதானம் மாதப் பத்திரிக்கையில் சகோதரி எழுதிய இயேசுவின் இரகசிய வருகை என்ற தொடரை, நித்திய வாழ்வின் இரகசியங்கள் என்ற பெயரில் புத்தகமாக தொகுத்திருக்கிறார்கள். இப்புத்தகத்தை வாசிக்கிற அனைவரும் எளிதில் புரிந்து கொள்கிற வகையில் மிகவும் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். சகோதரி அவர்களுக்கு கர்த்தர் கொடுத்த வெளிப்பாடுகளுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

இப்புத்தகத்தை வாசிக்கிற நீங்கள் பாக்கியவான்கள், பாக்கியவதிகள்! இம்மையில் மட்டுமல்லாமல், மறுமையிலும் கர்த்தர் உங்களுக்கென்று வைத்திருக்கிற ஆசீர்வாதத்தை நீங்கள் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்று நான் மிகவும் வாஞ்சிக்கிறேன். எனவே அதிக ஜெபத்தோடு இப்புத்தகத்தை வாசித்து, தியானியுங்கள். ஆண்டவர் இயேசு தாமே, உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளும்படி அனுக்கிரகம் செய்வாராக!

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்

**மோகன் சி. லாசரஸ்**

Tel : 04639-235 305 | 235 705 Fax : 04639 - 235 415
Email : infor@jesusredeems.com : http/www.jesusredeems.com/
for 24 hours prayer help Dial : 04639 - 235 315

இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையில் தேவ கிருபையால் பொற்செல்வி ராபின் எழுதி வரும் இயேசுவின் இரகசிய வருகை என்ற தொடரை, தொடர்ந்து படித்த சகோதரர் ஜெ. சாம் ஜெபத்துரை அவர்கள் கர்த்தரின் ஏவுதலின்படி, நித்திய வாழ்வின் இரகசியங்கள் என்ற புத்தகத்தை எழுதி வெளியிடச் சொன்னார்கள். கர்த்தருடைய கிருபையினால் கடந்த ஆண்டு 2012-ம், ஜுன் 1ஆம் தேதி சென்னை ஏலிம் மகிமையான தேவாலயத்தில் (கோடம்பாக்கம்) சகோதரர் சாம் ஜெபத்துரை அவர்கள் ஜெபித்து, பிரதிஷ்டை செய்த இப்புத்தகத்தை வாங்கிப்படித்து தேவ ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.



தேவ செய்தி & ஜெபம் ஏ.எஸ்.வி.ராபின் & பொற்செல்வி ராபின்




**என் அன்பு அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளே!**

**மகிமையின் ராஜா இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன்.**

நாம் கர்த்தர் இயேசுவின் கிருபையால் இந்த வருட இறுதிக்குள் பிரவேசிக்கிறோம். உங்கள் ஒவ்வொருவரின் ஜெபம் எங்களையும், இயேசுவின் சமாதானம் ஊழியத்தையும் தாங்கி வருவதை அதிகமாய் உணர்கிறோம். இதற்காக உள்ளத்தின் ஆழத்திலிருந்து உங்களுக்கு நன்றி செலுத்துகிறோம். தேவாதி தேவனை நன்றியோடு துதித்து மகிமைப்படுத்துகிறோம்.

கர்த்தர் இயேசுவின் பெரிதான இரக்கத்தினால் கோவையில், ஜனவரி 4,5 (சனி, ஞாயிறு) தேதிகளில் இயேசுவின் சமாதானம் பரவசபெருவிழா கூட்டத்தை ஒழுங்கு செய்திருக்கிறோம். இதில் நீங்கள் குடும்பமாய் கலந்து கொண்டு கர்த்தர் இயேசு தரும் ஆசீர்வாதத்தையும், அற்புதங்களையும், விடுதலையையும் பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

நீங்கள் வெளியூரில் இருந்தாலும் கோவைக்கு வந்து 2 நாட்கள் தங்கி இந்த நற்செய்தி கூட்டத்தில் கலந்து கொண்டு புத்தாண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள அன்புடன் அழைக்கிறோம்

தேவன் இயேசுவின் பெரிதான கிருபையினால், டிசம்பர் 9ம் தேதி 50 வருடங்கள் கடந்து, 51வது வருடத்தில் அடியெடுத்து வைக்கிறேன். எனக்காக நீங்கள் அதிகமாக ஜெபிக்க அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தினமும் **1 நிமிடமாவது** எங்களுக்காக, ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.
தேவன் இயேசு நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

**With Deep Love & Affection With Prayer**

உங்கள் அன்புத் தம்பி / அண்ணன்

**- ஏ.எஸ்.வி. ராபின்.**



இயேசுவின் சமாதானம் உடைந்த உள்ளங்களுக்கு
மாத இதழ்

**Final Designing & Editing**
ராஜ்லின்ட் ராபின் B.Sc.,Vis.com., (M.B.A.)
Managing Partner, Rajlynt Exports & Imports



# இயேசு வல்லமையுள்ள தேவன்

ஏ.எஸ்.வி. ராபின்

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்... அவர் நாமம் (பெயர்) அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு (ஏசா 9 : 6)

டிசம்பர் மாதம் என்றாலே இயேசுவின் பிறப்பைக் குறித்து உலக மக்கள் எல்லோருக்கும் ஞாபகம் வரும். இயேசு நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும், எப்பொழுதும் தங்கியிருந்தால், அவரின் வல்லமை நம் வாழ்வில் வெளிப்படும்.

## இயேசு கிறிஸ்துவின் வல்லமை

இயேசுவின் வல்லமை அளவிட முடியாதது. அவருடைய வல்லமையை நம்மில் சிலர் குறைவாய் மதிப்பிடுகிறோம். ஆகவே சோர்வு, பயம், கவலை, திகில், இருள் நம்மை கவ்வுகிறது. பைபிள் முழுவதும் வாசித்துப் பார்த்தால், இயேசு மிக, மிக, மிக வல்லமையுள்ள தேவன் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். அதே வல்லமை, இன்றும் உலகில் விளங்குகிறது. இன்றும், நம் ஒவ்வொருவரின் வாழ்விலும், இயேசுவின் வல்லமையை உணரலாம்.

12 வருடங்களாக பெரிய வியாதியினால் பாதிக்கப்பட்ட ஒரு பெண் இருந்தாள். தன் சொத்து எல்லாவற்றையும் விற்று மருந்துக்கும், மருத்துவருக்கும் செலவழித்தும் குணம் கிடைக்கவில்லை. வல்லமையுள்ள இயேசு வருவதை அறிந்தாள். ஆகவே அந்த பெண் இயேசுவைப் பார்க்கச் சென்றாள். அவரை சுற்றிலும் திரளான ஜனங்கள். இயேசுவிடம் நெருங்கவோ, பேசவோ முடியாத சூழ்நிலை. ஆனாலும். அவளுக்குள் ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை. இயேசுவின் ஆடையை தொட்டால் போதும். தன் நோய் குணமாகும் என்று இயேசுவின் அருகில் வந்தாள். இயேசுவின் ஆடையை தொட்டாள். அப்பொழுது அந்த நொடிப் பொழுதே அவள் நோய் குணமானது. அப்பொழுது இயேசு தம்மிடமிருந்து ஒரு வல்லமை கடந்து சென்றதை அறிந்தார்.

யார் என்னை தொட்டது? என்று கேட்டார். அவருக்கு யார் தொட்டது என்பது தெரியும். அவருடைய வல்லமை சுற்றியிருந்த ஜனங்களுக்கும், நமக்கும் தெரிய வேண்டும் என்பதற்காக இதைக் கேட்டார். அப்பொழுது பேதுருவும், கூட இருந்தவர்களும், இயேசுவிடம் நிறைய மக்கள் இருக்கிறார்களே, என்னை தொட்டது யார் என்று எப்படி கேட்கிறீர் என்றார்கள் அப்பொழுது இயேசு என்னிலிருந்து ஒரு வல்லமை புறப்பட்டது என்பதை அறிந்திருக்கிறேன் (லூக் 8:46) என்றார்.

நாமும், அந்தப் பெண்ணைப்போல இயேசுவின் வல்லமையை 100 சதவீதம் நம்பினால் நமக்குள் பயமோ, கவலையோ, எதுவும் இருக்காது. இயேசு நம் வாழ்வில் அற்புதத்தை செய்வார். நம்மை இயேசுவின் சமாதானம் நிரப்பும். (லூக் 8:48) ஏனெனில் இயேசு அண்ட சராசரங்களையும் நம்மையும் படைத்த வல்லமையுள்ள தேவன் அல்லவா?

இந்த வல்லமையுள்ள தேவன் இயேசு நம் வாழ்வில் காணப்படும் பாவம், சாபம், நோய், பில்லிசூனியக் கட்டுகள், பிசாசு கட்டுகளிலிருந்து நம்மை விடுவித்து உயர்வாய் வாழவைப்பார்.

## என் வாழ்வில் இயேசுவின் வல்லமை

நான் சிறுவயதில் படிக்கும் பொழுது நினைப்பேன், படித்து முடித்து ஏதாவது ஒரு நல்ல சம்பளத்தில் வேலையில் சேர வேண்டும். நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்ததினால் எனக்கு தாழ்வு மனப்பான்மை அதிகமாக காணப்படும். ஊழியம் என்றால் என்ன என்று தெரியாது. ஆனால் வல்லமையுள்ள தேவன் இயேசு என்னை கோவைக்கு அழைத்து வந்தார்.



30 வருடங்களாக இதே பட்டணத்தில் கிருபையாய் காத்து வருகிறார். என்னை நேர்த்தியாய் வழிநடத்தி வருகிறார். பிதா, குமாரன், பரித்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றேன். பின்பு எனக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும். வல்லமை வரங்களையும் தந்து, எனக்கு கிருபையாய் இரங்கி இந்த ஊழியத்தை தந்திருக்கிறார். இயேசுவின் வல்லமை என் வாழ்வில் இல்லாவிட்டால் என் நினைவின்படி நான், பட்டப்படிப்பு முடித்து, என் குடும்பத்தை நடத்தும் அளவிற்கு ஆசீர்வாதத்தைப் பெற்று இருப்பேன்.

ஆனால் என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல (ஏசா 55:8) என்ற தேவ வார்த்தையின்படி என் வாழ்வில், அவர் சித்தம் நிறைவேறி வருகிறது. தகுதியில்லாத எங்களைக் கொண்டு, பல லட்சம் மக்களை தேற்றி உதவி செய்து அவர்களுடைய ஆத்துமாவை பரலோகத்திற்கு நேராக திருப்பும்படி, தேவன் இயேசு அவருடைய வல்லமையை வெளிப்படுத்தி வருகிறார். இதை வாசிக்கும் நீங்கள் என்னைவிட மேன்மையானவர்களாய் இருப்பீர்கள். இந்த வல்லமையுள்ள தேவன் இயேசு, எங்களை விட உங்களை அதிகமாய் ஆசீர்வதித்து உயர்த்துவது அதிக நிச்சயம்.

## உங்கள் வாழ்வில் இயேசுவின் வல்லமை



உங்கள் எல்லா பிரச்சனைகளும், உங்களை தாயின் கருவில் உருவாக்கிய, தேவன் இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இயேசுவின் வல்லமை, உங்கள் வாழ்வில் வெளிப்பட, நீங்கள் அவரை முழுமையாய் நம்ப வேண்டும். ஏனெனில் உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். (1யோ 5:4).

இதோடு நீங்கள் பரிசுத்தமாய் வாழ்வதுதான், பரிசுத்த தேவனுக்கு பிரியம். உங்களை பரிசுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார். (யோசுவா 3:5 )உங்கள் ஆவி (உயிர்), ஆத்துமா, உடல் முழுவதையும் இயேசுவிடம் அற்பணியுங்கள். அப்பொழுது, தேவாதி தேவன் இயேசு உங்கள் உள்ளத்தில் தங்கி, உங்கள் வாழ்வில் அற்புதங்களையும், நன்மைகளையும் செய்வார். இப்படி இயேசுவின் வல்லமை உங்கள் வாழ்வில் வெளிப்படும்.



visit our website

*peaceofjesus.org*

(or) *peace of jesus* (or) *asv robin*



இதன் மூலம் இந்தியா மற்றும் உலக தேசமெங்கும் இயேசுவின் சமாதானம் ஊழியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை (E-magazine) வாசிக்கவும், ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் கொடுத்த வீடியோ செய்திகளைப் பார்க்கவும் தேவன் இயேசு கிருபை செய்திருக்கிறார். நீங்கள் இதன்மூலம் இயேசுதரும் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

சிந்திப்போம்

# பிறரை அற்பமாய் நினையாதிருப்போம்

-ராஜ்லின்ட் ராபின்.




**மனத்தாழ்மையால், ஒருவரை ஒருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணுவோம். (பிலிப். 2:3).**

19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து லண்டனுக்கு ஒருவர் சென்றிருந்தார். விலையுர்ந்த கார் ஒன்றை வாங்குவதற்காக, அங்குள்ள கார் ஷோரூமுக்கு சென்றார். இவர் வாங்க விரும்பியது பெயர் பெற்ற ரோல்ஸ் ராய்ஸ் (Rolls Royce) கார். காரை பார்க்கச் சென்ற இவர் எளிமையாக சாதாரணமாக இருந்தார். ஆகவே அந்த கார் நிறுவனம் இவரை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டது. இவர் சாதாரணமானவர் அல்ல. இவர் ஹைதராபாத் மன்னர் என்பது அவர்களுக்கு தெரியவில்லை.

## ராஜ மரியாதை

மனமுடைந்து தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்த இவர் தன் பணியாளர்களை அழைத்து இவ்வாறு கூறினார். அந்த கார் கம்பெனிக்கு தகவல் சொல்லுங்கள், இந்தியாவிலிருந்து ஒரு மன்னர் கார் வாங்க வருகிறார் என்று. இவரும் பணியாளர்களும் கார் கம்பெனிக்கு சென்றார்கள். இவர் ராஜ உடையில் அங்கு சென்றார்.

இவர் வருவதை அறிந்த அவர்கள் சிவப்பு கம்பளம் விரித்து மிகவும் பணிவோடும் சிறந்த மரியாதையோடும் இவரை வரவேற்றனர். அந்த ஷோரூமில் 6 கார்கள் மட்டும் இருந்தன. 6 கார்களையும் முழு தொகையை கொடுத்து இவர் வாங்கினார்.

## அவமானப்பட்ட கார் கம்பெனி

இந்த கார்களை இந்தியாவுக்கு அனுப்பி, இவைகளை குப்பை அள்ளும் வாகனமாக பயன்படுத்த, கொடுத்துவிட்டார். இந்த செய்தி உலகம் முழுவதும் பரவியது. வெளிநாடுகளில் இந்த காரை வைத்திருப்பவர்களைப் பார்த்து மற்றவர்கள், இந்த கார் இந்தியாவில் குப்பை அள்ளும் கார் அல்லவா? என்று கூறி கிண்டல் செய்தார்கள். இதன் காரணமாக உலகம் முழுவதும் இந்த கார் விற்பனை சரிந்து நஷ்டத்தை சந்தித்தது.

## தாழ்மையினால் கிருபை

இதை அறிந்த கார் நிறுவனம், இந்தியாவிலுள்ள அந்த மன்னருக்கு டெலிகிராம் கொடுத்து, அவரை அவமானப்படுத்தியதற்காக மன்னிப்பு கேட்டது. இனிமேல் எங்கள் காரை குப்பை அள்ள பயன்படுத்த வேண்டாம் என்று மிகுந்த தாழ்மையோடு கேட்டுக் கொண்டது. இந்த மன்னரும் அவர்களை மன்னித்தார். அதோடு அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். இதில் சந்தோஷப்பட்ட அந்த கார் நிறுவனம், இவருக்கு இலவசமாக 6 புதிய ரோல்ஸ் ராய்ஸ் கார்களைப் பரிசாக அனுப்பியது.



## பிறரை மதிப்போம்

ஆகவே நாமும் பிறர் தோற்றத்தை வைத்து அவர்களை அற்பமாய் நினைக்கக் கூடாது. மற்றவர்களை நம்மை விட மேன்மையாக நினைத்து, அவர்களை மதிப்போடும், மரியாதையோடும் நடத்த வேண்டும். இல்லையென்றால் நமக்கு அவமானமும், வேதனையும், தலைக்குனிவும், நஷ்டமும் ஏற்படும். பிறரை உயர்வாய் நினைக்கும் பொழுது, இயேசு நம்மை உயர்வாய் வாழ வைப்பார்.

பெண்கள் பகுதி

# தோட்டம்



- பொற்செல்வி ராபின்

பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவருக்கே மகிமை!

என் பாசத்திற்குரிய சகோதரியே, இறைவன் இயேசுவின் இனிய பெயரால் உங்களையும், உங்கள் குடும்பத்தினர் யாவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

## ஆறுதலின் தேவன்

நீங்கள் மகிழ்ச்சியாய் புறப்பட்டு, சமாதானமாய் கொண்டு போகப்படுவீர்கள் என்று ஏசாயா 55 : 12ம் வசனத்தில் தேவன் இயேசு உங்களை ஆறுதல்படுத்தி தேற்றுகிறார். நம்மை தேற்றி, நமக்கு மகிழ்ச்சியைத் தரும் தேவன் ஒருவர் உண்டு. இவர் தான் இயேசு கிறிஸ்து. மனித அன்பை விட மேலானது, இறைவன் இயேசுவின் அன்பு. இந்த அன்பு நம்மை வாழ வைக்கும் அன்பு. பைபிளில் இயேசுவை, கர்த்தர் என்று எழுதப்பட்டிருக்கிறது.

## காக்கும் தேவன்

நீதியை அறிந்தவர்களே, என் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களே, எனக்கு செவி கொடுங்கள், மனுஷரின் நிந்தனைக்கு (அவமானமான வார்த்தைகளுக்கு) பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் (கொடிய வார்த்தைகளைக் கேட்டு) கலங்காமலும் இருங்கள் என்று ஏசாயா 51:7ம் வசனத்தின் மூலம் தேவன் இயேசு உங்களோடு பேசுகிறார்.

பைபிள் வசனங்களை வாசித்து, தேவன் இயேசு நடத்தும் நீதியின் பாதையில், நீங்கள் நடக்கும் போது, அவமானங்களையும், கொடிய சொற்களையும் தாங்கி வர உங்களால் முடியும். ஒரு கேடும் வராமல் இயேசு தடுத்து நிறுத்துவார்.

## ஆசீர்வதிக்கும் தேவன்



நீ நீர் பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும்.... இருப்பாய் என்று ஏசாயா 58:11ம் வசனத்தில் தேவன் கூறுகிறார்.

என் குடும்பத்தில் ஒரு செழிப்பும் இல்லை என்று கலங்குகிறீர்களா? தொழில், வியாபாரத்தில் நஷ்டமா? குடும்பத்தில் சமாதானம் இல்லையா? என் பிள்ளைக்கு இன்னும் திருமணமாக வில்லை என்று தவிப்பா? எனக்கு குழந்தை பிறக்காததால் அவமானம் வருகிறதே என்று அழுகிறீர்களா? எனக்கு, என் பிள்ளைக்கு நல்ல வேலை இல்லை அல்லது இன்னும் வேலை கிடைக்கவில்லையே என்று வருந்துகிறீர்களா?

என் குடும்பத்தில் பிள்ளைகள் அல்லது பேரன், பேத்தி நன்றாய் படிக்கவில்லை என்று கவலைப்படுகிறீர்களா? கடன் தொல்லை உங்களை

கண்ணீர் வடிக்க வைக்கிறதா? தேவன் இயேசுவின் பாதத்தில், உங்கள் பாரத்தை ஜெபம் மூலம் இறக்கி வையுங்கள். அவர் எல்லாவற்றையும் தந்து உங்களை மகிழப் பண்ணுவார்.

## பேசுகின்ற தேவன்

தேவனை மகிமைப்படுத்தி நம்மை உருவாக்கிய தேவன் இயேசுவை நன்றியோடு துதித்து, பின்பு பைபிள் வாசியுங்கள். சில வசனங்கள் மூலம் இயேசு உங்களோடு பேசுவதை உணர்ந்து ஆச்சரியப்படுவீர்கள் பின்புஜெபியுங்கள். உங்கள் உள்ளம் மகிழும். உள்ளத்தில் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை உண்டாகும். சிலருக்கு உள்ளத்தில் இயேசுவின் குரல் கேட்கும். இது மிகவும் சந்தோஷமான அனுபவம். தேவன் இயேசு விரும்புகிறதை செய்தால், உங்கள் வாழ்வும், உங்கள் குடும்பமும், அழகிய மலர்கள், கனிகள் நிறைந்த தோட்டம் போல காணப்படும்.

சாட்சி

# உதவி செய்ய தூண்டிய இயேசுவின் சமாதானம் பத்திரிக்கை



தேவ ஊழியர் ராபின் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எங்களது அன்பின் வாழ்த்துக்கள். சமீபத்தில் நான் கோவை காந்திபுரம் வந்த போது ஒரு கிறிஸ்தவ புத்தக கடையில் இயேசுவின் சமாதானம் பத்திரிக்கை ! வாங்கினேன். பத்திரிக்கை வாசித்தேன்.

உங்கள் ஊழியம் பற்றிய விபரங்கள் அறிந்து மிகவும் சந்தோஷம் அடைந்தேன். கர்த்தரை துதிக்கிறேன். உங்கள் ஊழியம் இன்னும் வளர்ந்து பெருகும்படி கர்த்தர் உங்கள் ஊழியங்களை இன்னும் அதிகமாக ஆசிர்வதிக்கும்படி ஜெபிக்கிறோம். உங்கள் இயேசுவின் சமாதானம் பத்திரிக்கை படித்தபின் மாதந்தோறும் 10 பேருக்காவது உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கமும் யாருக்கும் தீங்கு செய்யக் கூடாது என்ற எண்ணமும் வந்தது.

பத்திரிக்கை செய்திகள் தேவ கிருபையால் மிக அருமையாக உள்ளது. கர்த்தர் உங்கள் ஊழியங்களை விரிவடைய செய்வாராக.

# தொடர்ந்து அற்புதங்களை செய்து வரும் இயேசு

என் அன்பு சகோதரிக்கு,

என் மகளுக்கு குறைப்பிரசவம் ஏற்பட்டு, குழந்தை பெலவீனமாகி மரணத்தோடு போராடியதும் உங்களை இதற்காக ஜெபிக்க சொன்னேன். நீங்கள் பாரத்தோடு ஜெபித்த போது, பிள்ளை உயிரை தேவன் இயேசு காப்பாற்றினார்.

என் மகனுடைய தடைப்பட்ட திருமணத்தையும் தங்கள் ஜெபம் மூலம் இறைவன் இயேசு தடைகளை நீக்கி சிறப்பாக நடத்தி தந்தார் மட்டுமல்ல, லட்சக்கணக்கான கடன் தொல்லையிலிருந்தும் தேவன் இயேசு உங்கள் ஜெபம் மூலம் விடுதலை தந்து எங்களை மகிழ்ச்சியாய் வாழ வைத்திருக்கிறார். என் மகளின் மாமனார், மாமியார் ரட்சிக்கப்பட்ட உங்களை ஜெபிக்க சொன்னேன். கர்த்தர் இயேசு நம் ஜெபம் கேட்டு அவர்களை இரட்சித்திருக்கிறார். என் வாழ்வில் இத்தனை அற்புதங்களையும் செய்த தேவாதி தேவன் இயேசுவை நன்றியோடு துதித்து மகிமைப்படுத்துகிறேன்.

**ஆர். விவேகா,** கோவை.

# கேள்வி பதில்

ஏ.எஸ்.வி. ராபின்

ஒரு சில கிறிஸ்தவ பத்திரிக்கைகளில் மற்ற தேவ ஊழியர்களை பெயர் குறிப்பிட்டு குற்றம் சாட்டி, விமர்சித்து, எழுதுகிறார்கள். ஏன் அப்படி எழுதுகிறார்கள்? அந்த பத்திரிக்கைகளை வாசிக்கலாமா? நாங்கள் என்ன செய்ய வேண்டும்?.

**எல். பிலோமினா**
மும்பை



பொறாமையின் காரணமாக எழுதுகிறார்கள். அதை வாசிக்க வேண்டாம். அதை வாசிப்பதால், நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் குறைந்து விடுவோம். எந்த ஆசீர்வாதமும் கிடைக்காது. சில ஊழியர்கள், மற்றவர்களை குற்றம் சாட்டி, எழுதுகிறார்கள் என்றால், தாங்கள் உண்மையானவர்கள், நேர்மையானவர்கள், பரிசுத்தவான்கள் என்ற பெருமையும், மற்ற ஊழியர்கள் வளர்ச்சியில் பொறாமையும் இருக்கிறது என்று அர்த்தம். பெருமையும், பொறாமையும் ஒருவரை முடிவில் நரகத்தில் தள்ளிவிடும். ஆகவே அவர்கள் மனம்திரும்பி, பரலோகம் வர நாம் ஜெபிப்போம். பைபிளில் லூக்கா 18:10 முதல் 14 வரை வாசித்துப்பாருங்கள்.

பரிசேயர் ஒருவர் ஜெபம் செய்யும் போது தேவனே, நான் கொள்ளையிடவில்லை, அநியாயம் செய்யவில்லை, விபச்சாரம் செய்யவில்லை என்று தன்னை பரிசுத்தவானாய் காட்டி, இன்னொருவரை (வரிவசூலிப்பவர்) குற்றம் சாட்டி, இவனைப் போல நான் இல்லை என்று தன்னை உயர்த்தினார். ஆனால், அந்த வரி வசூலிப்பவரோ (ஆயக்காரர்) தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத் துனியாமல், நான் ஒரு பாவி, என் மேல் கிருபையாய் இரும் என்று ஜெபம் பண்ணினார். இயேசு சொல்கிறார் மற்றவனை குற்றம் சாட்டிய பரிசேயன் அல்ல, வரிவசூலிப்பவரே நீதிமான் என்றார். மற்றவரை குற்றம் சாட்டி எழுதுகிறவர்கள், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளராமல் இருப்பதைக் காட்டுகிறது.

இவர்களுக்கு, தரிசனமோ, ஆவிக்குரிய உன்னத அனுபவமோ இருக்காது. பல வருடங்கள் ஊழியம் செய்தும், தங்களுடைய ஊழியத்தில் வளர்ச்சியில்லாமல் இருப்பதால், தன்னைவிட குறைந்த வயதுள்ள ஊழியர்கள் கர்த்தருக்காக பிரகாசிப்பதைப் பார்த்து, இவர்களால் சகிக்க முடிவதில்லை. இவர்கள் நல்லவர்கள் தான். இவர்களுக்குள் புகுந்து ஊழியம் செய்யும், சாத்தான் கொடியவன். ஆகவே, இதுபோன்ற ஊழியர்களுக்காக ஜெபிப்போம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.



ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின் கொடுத்த தேவ செய்திகளைக் கண்டு
தேவன் இயேசு தரும் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்
keyword : ASV Robin, Rajlynt Robin, Porchevi Robin


உலக மக்களின் நல்வாழ்வை விரும்பும்

# இயேசுவின் சமாதானம் ஊழியங்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள்

– ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின், ராஜ்லின்ட் ராபின்

- திக்கற்றோர், ஊனமுற்றோர், முதியோர் மத்தியில் ஊழியம்
- உள்தேச, வெளிதேச பிரசங்க ஊழியம்
- ஏழைகள் மத்தியில் சுவிசேஷம் மற்றும் உதவி
- ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம்
- மருத்துவமனை ஊழியம்
- தொலைக்காட்சி ஊழியம்
- உபவாச ஜெப ஊழியம்
- தொலைபேசி ஊழியம்
- மலைப்பகுதி ஊழியம்
- பத்திரிக்கை ஊழியம்
- கைப்பிரதி ஊழியம்
- புத்தக ஊழியம்
- கடித ஊழியம்
- பாடல் ஊழியம்
- மனநல காப்பக ஊழியம்
- மிஷனெரி ஊழியம்
- இலங்கை அகதிகள் மத்தியில் ஊழியம்
- விளம்பரம் மூலம் சுவிசேஷ ஊழியம்





















# பிரியமானவர்களே...

## ஒன்று சேர்ந்து இயேசுவின் ராஜ்ஜியத்தை கட்டுவோம்

இந்த சிறியரில் ஒருவனுக்கு... எவைகளை செய்தீர்களோ, அவைகளை எனக்கே செய்தீர்கள் (மத் 25:40) என்ற இயேசுவின் வார்த்தையின்படி நீங்கள் எங்களோடு இணைந்து, ஏழைகளுக்கும், தேவையுள்ளோருக்கும் உதவி செய்யலாமே? இதற்குரிய பலனையும், ஆசீர்வாதத்தையும் தேவன் இயேசு உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் இவ்வுலகில் தந்து மகிழப் பண்ணுவார். தேவ கிருபையினால் நாங்கள் நிறைவேற்றி வரும் நலத் திட்டங்களை இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையின் மூலமாக நீங்கள் அறிவீர்கள்.

ஏழைகள், திக்கற்றோர், பசியினால் வாடுபவர்களுக்கு ஆறுதல் சொல்லி, உதவி செய்வது தேவன் இயேசுவின் நோக்கமாய் இருக்கிறது. திக்கற்றநிலையில் உள்ள சிறு பிள்ளைகளின், வாலிப பிள்ளைகளின் படிப்பிற்கு தேவையான பணஉதவி, ஊனமுற்றோர்,முதியோர், ஏழைகள், நோயினால் அவதிபடுவோர் போன்றோருக்கும் இவ்வூழியத்தின் மூலம் உதவி செய்ய இயேசு கிருபை செய்கிறார். நீங்கள் இவ்வுழியத்திற்கு பண உதவி செய்து தாங்கும்படி அன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் மூலம் செய்யப்படும் 18 வகையான ஊழியங்களுக்கு, மாத மாதம் பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே நீங்களும் எங்களோடு இணைந்து மாத மாதம் ரூபாய் 100 முதல் லட்சம் வரை நன்கொடை கொடுத்து இயேசுவின் ராஜ்ஜியத்தை கட்ட அன்போடு அழைக்கிறோம்.

**ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் இயேசுவின் சமாதானம் இந்தியா**

## இந்த ஊழிய தேவைக்கான உங்கள் ஜெபம்

இயேசுவின் சமாதானம் ஊழியத்தின் எல்லை ஒவ்வொரு மாதமும் விரிவாகிவருவதால், பணத் தேவை ஒவ்வொரு மாதமும் அதிகமாகிறது. ஒரு மாதத்திற்கு பல லட்ச ரூபாய் தேவைப்படுகிறது. இத்தேவைகள் சந்திக்கப்பட மறக்காமல் நீங்கள் உங்கள் ஜெபத்தில் தாங்கும் படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம். தேவன் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

## உங்கள் நன்கொடை

நீங்கள் இவ்வூழியத்திற்கு நன்கொடை அனுப்ப விரும்பினால் இந்தியாவில் நீங்கள் எங்கு வசித்தாலும் கீழ்கண்ட வங்கிக் கிளைகளில் நேரடியாக பணத்தைச் செலுத்தலாம் அல்லது மணியார்டர், டி.டி. மூலமாக நன்கொடை அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST | A/c No. 615201134411 |
| | A.S.V. ROBIN | A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY | A/c No. 00610200034441 |
| State Bank of India | A.S.V. ROBIN | A/c. No. 31682257041 |
| TMB Tamilnad Mercantile Bank Ltd | A.SOLOMON VICTOR ROBIN | A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN | A/c. No. 010601000025999 |
| इंडियन बैंक Indian Bank | YESUVIN SAMADHANAM | A/c No. 725420502 |
| | A.S.V. ROBIN | A/c. No. 434465781 |

பைபிளும் – நாட்டு நடப்பும்

# வாழ்வை சீரழிக்கும் இண்டர்நெட்

நாசியில் சுவாசமுள்ள மனிதனை நம்புவதை விட்டுவிடுங்கள். (ஏசா 2:22) .

ஏ.எஸ்.வி. ராபின்



இன்று இணையதளத்தின் மூலம், ஏமாறும் மக்கள் ஏராளம். இதனால் தங்கள் வாழ்வு சீரழிந்து நிலைகுலைந்து நிற்கும் ஆண்களும், பெண்களும் பெருகி வருகிறார்கள்.

## ஏமாந்த பெண்களில் ஒருவர்

தன்னுடைய வாழ்க்கை பாழான கதையை பேஸ்புக்கில் கொட்டிகுமுறி இருந்தார். நாமக்கல்லை சேர்ந்த ஒரு பெண். 5 வருடங்களுக்கு முன் என்னை நேசித்து, திருமணம் செய்த ஒருவர் என்னையும், என் குழந்தையையும் ஏமாற்றி, இரண்டாவதாக இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். எனக்கு நீதி வேண்டும் என்பது இந்த பெண்ணின் கோரிக்கை.

## ஏமாந்த இன்னொரு பெண்

சென்னையில் வசிக்கும் இன்னொரு பெண், நான் தனியார் கம்பெனியில் வேலை பார்த்தேன். திருமண இணையதளத்தின் மூலம், என் அப்பாவிடம் பேசிய இவர், குடும்பத்துடன் பெண் பார்க்க வந்தார். என்னை பிடித்து போனதால் நிச்சயதார்த்தம், வைக்கப்பட்டது. இந்த போட்டோவை பேஸ்புக்கில் வெளியிட்டோம். இதைப் பார்த்த ஒரு பெண், இவர் தன்னை ஏமாற்றியதாக போனில் கூறினாள். இந்த சம்பவத்தை அவரின் (நிச்சயிக்கப்பட்டவரின்) அம்மாவிடம் சொன்ன போது, அது முடிந்து போன கதை, உன்னைத்தான் எங்களுக்குப்பிடித்திருக்கிறது என்றார். பின்பு, கடந்த ஆகஸ்ட் 2013ம் ஆண்டு திருமணம் நடந்தது. என் தங்கை என்னிடம் பேஸ்புக்கில் ஒரு போட்டோவை காட்டினாள். அதில் தொலைபேசியில் பேசிய பெண் கழுத்தில் மஞ்சள் கயிறுடன் என் கணவரோடு ஜோடியாக இருந்தார். அதில் முதல் மனைவியின் திருமண பதிவு சான்றிதழ், ரேஷன் கார்டு, குழந்தை பிறப்பு சான்றிதழ் காணப்பட்டது. ஒவ்வொன்றிலும் என் கணவரின் பெயர் இருந்தது. இதைப் பார்த்து நிலை குலைந்து போனேன். இதை அவரிடம் கேட்டதற்கு அவளை விரும்பி திருமணம் செய்தேன். என்னை விட்டு போய்விட்டாள் என்று சிறிதும் தயக்கமின்றி சாதராணமாக பதிலைச் சொன்னார்.





## ஏமாற்றியவரின் துணிகரம்

என்னை ஏன் ஏமாற்றி திருமணம் செய்தீர்கள் என்று கேட்டேன். என்னை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. நான் நினைத்தால் இன்னும், எத்தனை திருமணம் வேண்டுமானாலும் செய்வேன். என்னை யாரும் தடுக்க முடியாது என்று கர்ஜித்தார்.

தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள். திருமண காரியத்தில் ஜாக்கிரதையாய் இருங்கள். (1பேதுரு 5:8) யூதா கோத்திரத்து சிங்கம் இயேசுவை (வெளி 5:5) தேடி வாருங்கள். இயேசு உங்களை காப்பார்.

வாலிபர் பகுதி



# சாந்தமா? கோபமா?

-பொற்செல்வி ராபின்

**அன்புத் தம்பி, தங்கையே,**

பரிசுத்த தேவன் இயேசுவின் பெயரால் உன்னை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவாதி தேவனுக்கே மகிமை!

## சாந்த குணம்

கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார், சாந்த குணம் உள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார் என்று சங்கீதம் 149:4ம் வசனம் கூறுகிறது. நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என்று மத்தேயு 11:29ம் வசனத்தில் இயேசு கூறுகிறார். இந்த சாந்த குணம் தேவன் இயேசுவின் விசேஷித்த குணமாய் இருக்கிறது. ஆகவே சாந்த குணத்தை தேவன் இயேசுவிடமிருந்து ஜெபித்து, கேட்டுப் பெற்றுக்கொள். இதோடுகூட அவர் உனக்கு மனத்தாழ்மையையும் சேர்த்தே தருவார்.

## கோபம் தகாதது

சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்த துர்குணமும் உங்களை விட்டு நீங்க கடவது என்று எபேசியர் 4:30ம் வசனம் கூறுகிறது. "சூரியன் அஸ்தமிக்கு முன்னே உங்கள் எரிச்சல் (கோபம்) தணியக் கடவது, பிசாசுக்கு இடம் கொடாமலும் இருங்கள் "என்று எபேசியர்4:26 வசனம் கூறுகிறது. உன் உள்ளத்தில் எவரைக் குறித்தும் கோபத்தை வைத்திராதே. கோபம் என்பது தேவன் விரும்பாத குணம். மட்டுமல்ல கோபத்திற்கு இடம் கொடுத்தால் சாத்தான் உன் உள்ளத்தில் நுழைவான்.


## சாத்தானின் தந்திரம்

கோபத்தின் காரணமாகத்தான் இன்றைய உலகில் பல குற்றங்கள் நடந்து விடுகின்றன. கோபத்தின் காரணமாக கொலை செய்கிறார்கள், சண்டை போடுகிறார்கள். பிறரை உடனே அடித்து விடுகிறார்கள். கோபம் உள்ளவர்கள் சமுதாயத்திலும், குடும்பத்திலும் பல அவமானத்திற்கு ஆளாகும் நிலைமை ஏற்படுகிறது. ஒரு வேளை நீ கோபக்காரனாக, கோபக்காரியாக இருக்கலாம். இன்றே இயேசுவின் பாதத்தில் விழுந்து கண்ணீரோடு ஜெபித்து, அவரிடமிருந்து விடுதலையைப் பெற்றுக் கொள். ஏனெனில் கோபம் உனக்கு எதிரிகளை உருவாக்கும். உனக்கு வேதனை உண்டாக்கும். இது சாத்தானின் தந்திரங்களில் ஒன்று.

## சமாதானத்தின் தேவன்

ஏசாயா 9:6ம் வசனம் இயேசுவை "சமாதானப் பிரபு" என்று கூறுகிறது. கோபம் உள்ள இதயத்தில் சமாதானம் அதாவது நிம்மதி இருப்பதில்லை. பிறரைக் குறித்த கோபம், எரிச்சல் உன் உள்ளத்தில் இருந்தால், இரவு நேரம் உன்னால் நிம்மதியாய் உறங்க முடியாது. கோபம் வேண்டாம். அதை உன்னை விட்டு வெளியே எடுத்துப் போடு. சமாதானப் பிரபு இயேசு, உன்னை சாந்த குணமுள்ளவனாக, சாந்தகுணமுள்ளவளாக மாற்றி உனக்கு சமாதானம் தருவார். ஆகவே இயேசுவை உறுதியாய் பற்றிக் கொள். தீயவரை விட்டு விலகு அ... ப்பொழு... து இயேசு... உன்னை... மகிழ்ச்சி... யாக்கு... வார்.






# வேத வினாப் போட்டி

(அனைவரும் கலந்து கொள்ளலாம்) நெகேமியா 1 - 10
"கர்த்தருக்கு மகிழ்ச்சியாய் இருப்பதே
உங்கள் பெலன்"
- சொன்னவர் யார்?

சென்ற மாத சரியான விடை
நீதிமொழிகள் 28:1 சாலொமோன்



ஆக்னஸ் லாரன்ஸ்

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 20.12.2013**


# இயேசுவின் சமாதானம் பெறுங்கள்

இயேசுவின் சமாதானம் மூலம் வெளியிடப்பட்ட
உடைந்த உள்ளங்களுக்கு
**பரவசப் பாடல்கள் - பாகம் - 1 ACD**
வேண்டுவோர் ரூ. 50/-ம்





இயேசுவின் சமாதானம் **பரவச நேரம்**
ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின்
கொடுத்த 4தேவ செய்திகள் அடங்கிய
DVD பெற விரும்பினால் ரூ. 50/-ம்



பொற்செல்வி ராபின் எழுதிய
பரலோக, நரக தரிசனங்கள் அடங்கிய
**நித்திய வாழ்வின் ரகசியங்கள்**
புத்தகம் பெற விரும்புவோர்
ரூ. 30/-ஐ அனுப்பி, தபாலில்
பெற்றுக் கொள்ளுங்கள்.



இயேசுவின் சமாதானம்
**மாத இதழ்**
**ஆண்டு சந்தா**
**ரூ. 40/-**

**முடியாதவர்களுக்கு இலவசம்**

எங்கள் முகவரி
**இயேசுவின் சமாதானம்**
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் - 641 021,
தென் இந்தியா



Our Address
**PEACE OF JESUS**
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India

ஜெப உதவி / தொடர்புக்கு : (+91) 9994510610
Email: asvrobin@gmail.com www.peaceofjesus.org



தொடர் - 100

# ஆயத்தப்படுங்கள், ஆயத்தப்படுத்துங்கள்

# இயேசுவின் ரகசிய வருகை

- பொற்செல்வி ராபின்

## ஜீவ விருட்சம்

ஜெயம் கொள்ளுகிறவன் எவனோ, அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியில் இருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்கக் கொடுப்பேன் என்று வெளி 2:7ல் இறைவன் இயேசு கூறுகிறார். இவ்வுலகில் பாவத்தையும், அக்கிரமத்தையும் ஜெயித்து, வாழும் மன உறுதியை தரக் கூடியவர் நம் தேவன் இயேசு மட்டுமே. பாவம் செய்து, அதிலிருந்து வெளியே வரமுடியாதவர்கள் இயேசுவிடம் வந்து அதிலிருந்து விடுதலை பெறவும், அவரே இரக்கம் செய்கிறார். பாவம் செய்தேன், அக்கிரமம் செய்தேன். என்னை மன்னியுங்கள் இயேசுவே, என்று அழுது புலம்புவோரை தேவன் இயேசு மன்னித்து, பரலோக ஜீவ புஸ்தகத்தில் அவர்களுடைய பெயரை எழுதுவார். பரலோகத்திலுள்ள ஜீவ விருட்சம் என்ற மரத்தின் கனியை புசிக்கக் கூடிய பாக்கியத்தை மரணத்திற்கு பின்பு தருவார்.

## முதல் பாவம்

பைபிளில் முதல் மனிதனாகிய ஆதாமும், தேவன் அவருக்கு கொடுத்த வாழ்க்கை துணை, ஏவாளும் தேவ கட்டளையை மீறி சாத்தானுடைய சொல் கேட்டதால், ஏதேன் தோட்டத்தின் ஜீவ விருட்சத்தின் கனியை தேவன் அவர்களுக்கு கொடுக்கவில்லை. இதன் காரணமாக பரதீசில் உள்ள மரணமில்லாத வாழ்வை இழந்தனர். தேவனுடைய சாபத்தின் காரணமாக இவர்கள் வியாதி, பாடுகள், மரணத்தை சந்திக்க வேண்டியதாயிற்று. இதன் மூலம் உலக மக்களுக்கு பாவமும், அதோடு மரணமும் வந்தது. தேவன் உண்ண வேண்டாம் என்று விலக்கிய கனியை ஆதாம், ஏவாள் புசித்து தேவனை துக்கப்படுத்தினார்கள்.

## பரலோகத்தில்

நகரத்து (பரலோகத்தின்) வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் (மரத்தின்) இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள் என்று தேவனால், பரலோகத்திற்குள் கொண்டு செல்லப்பட்ட யோவான், வெளி 22 : 2ம் வசனத்தில் எழுதியிருக்கிறார்.

ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர் களாவதற்கும், வாசல்கள் (பரலோகத்தின் வாசல்கள்) வழியாக பரலோகத்திற்குள் பிரவேசிப்பதற்கும், அவருடைய கற்பனைகளின்படி (கட்டளை) செய்கிறவர்கள் பாக்கியவான்கள் (வெளி. 22 : 14)

- தொடரும்.

# தக்காளி



வடிவத்தில் உருண்டையானது. நிறத்தில் சிவப்பானது. புளிப்பு இனிப்பு கலந்த சுவை உடையது.

காய்கறிகளில் மிகவும் எளிதாகவும் விரைவாகவும் ஜீரணமாக்கூடியது. வைட்டமின் ஏ,பி,சி என்று பல சத்துக்கள் நிறைந்தது.

உடம்புக்கு ஆரோக்கியதைத் தரும். மூன்று விதமான புளிப்புச் சுவைகள் தக்காளிப் பழத்தில் இருக்கின்றன. முதாலவது, ஆப்பிள் பழத்திலிருக்கும் பாலிக் அமிலம். இது பழத்துக்குப் புளிப்புத் தன்மை தருகிறது. இரண்டாவது எலுமிச்சை, சாத்துக்குடி முதலியவற்றிலிருக்கும் சிட்ரிக் அமிலம். இதன் புளிப்பு, கிருமிகளை கொல்லக்கூடியது. மூன்றாவது, பாஸ்போரிக் அமிலம் இது நரம்பு, நாடி சம்பந்தமான நோய்களுக்கு மிகவும் நல்லது.

உடலில் புதிய ரத்தம் சுரக்க உதவும் இந்தத் தக்காளி, ஏழைகளின் ஆப்பிள் என்று அழைக்கப்படுகிறது. தக்காளிலுள்ள சோப்பின் என்ற வேதியியல் பொருள் ஈரல், வயிறு கேன்சரை தடுக்கிறது. இதய நோயை தடுக்கிறது. இதிலுள்ள விட்டமின் சி தோலுக்கும், பற்களுக்கும் நல்லது.

இது ஜாம், ஜுஸ், சூப், சட்னி, குழம்பு வகைகள், ரசம், ஊறுகாய் போன்றவைகள் தயாரிக்கப் பயன்படுகிறது.


## இயேசுவின் சமாதானம் பரவசப் பாடல்கள் - பாகம் 2

## என் இயேசு..




**கர்த்தர் இயேசுவின் கிருபையால் நவீன இசையில் உருவாகிய உள்ளத்தை இயேசுவிடம் திருப்பும், இனிமையான ஆடியோ சிடி, விடியோ சிடி 2014ம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி வெளிவருகிறது இதற்காக நீங்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள்.**



**பாடல். ராகம் & பாடியவர்கள்**

**ராஜ்லின்ட் ராபின்**

**ஏ.எஸ்.வி. ராபின்**

**( இசை : ஜி.எம். ஞானகுமார், டிவைன் மெலடிஸ் )**

JB HOMES

# Build your Home !....
# Like your Dreams !...

# ஜே.பி. ஹோம்ஸ்-ன் முதல் படைப்பு

ஒத்தக்கால் மண்டபம், கோயமுத்தூர்.

JENIFER NAGAR

**120 VILLAS**

DTP

## அப்ரூவ்டு வீட்டுமனைகள்

1. யூகோ வங்கியில் 80% கடன் ஏற்பாடு செய்து தரப்படும்.
2. மனையிடங்களை பார்வையிட வாகன வசதி உள்ளது.
3. கோவை – பொள்ளாச்சி மெயின் ரோடு
4. மனையை சுற்றிலும் பாதுகாப்பு 24 மணி நேரமும்
5. சோலார் மின் விளக்குகள்
6. பைப்பாஸ் – 3 கி.மீ.
7. கற்பகம் மருத்துவக்கல்லூரி மிக அருகில்




BOOKINGS OPEN NOW

DON'T MISS IT

0422 2493370

தொடர்பு முகவரி :

**JB HOMES AND PROPERTY DEVELOPERS PVT LTD.**

8th Street, Gandhipuram, coimbatore - 641 012.
Email id : jbpropertydeveloperspvtltd@gmail.com

எங்களது வங்கி : யூகோ வங்கி, ரேஸ்கோர்ஸ், கோவை – 18.

# X-MAS STARS EXHIBITION SALES



- X-Mas Trees (Imported) All Sizes
- X-Mas Stars (New Models)
- X-Mas Tree Decortations
- X-Mas Dolls
- X-Mas Father Dresses
- X-Mas Stars Gifts, Ballons
- X-Mas & New Year Cards
- Fancy Colourful Lights
- Fancy Masks, Colour Papers

**Available In :**
**Retail & Whole Sale Price**

*Wish You A Happy X-Mas Blessed New Year*

## புத்தாண்டு சிறப்பு விற்பனை பிரிவு

**Sports, Toys, Musical Instrument & Gift Items on Sale**




## SELVASINGH™ STORES

opp. Lakshmi Complex, Crosscut Road,
Coimbatore - 641 012. Ph : 0422 2493987

உடைந்த உள்ளங்களுக்கு
# இயேசுவின் சமாதானம்

அனைவருக்கும் சுவிஷேசம்

ஏழைகளின் நலனில்

உடைந்த உள்ளங்களுக்கு
இயேசுவின் சமாதானம்



இயேசுவை அறியாதவர்களுக்கு,
இயேசுவைப் பற்றிச் சொல்லி,
இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை
ஏ.எஸ்.வி. ராபின் கொடுத்த போது,
வாங்குபவர் பதநீர் விற்பவர்.
(இடம் : ஆழியார் டேம் அருகில், வால்பாறை ரோடு)



கர்த்தர் இயேசுவின்
கிருபையினால்,
20 ஏழைக்குடும்பங்களுக்கு, ஏ.எஸ்.வி. ராபின்
பண உதவி செய்து, ஜெபித்தபோது,
இடம் : கோண்டி நகர்,
சிட்கோ, கோவை.



## ஈரோட்டில்
# எழுப்புதல் பெருவிழா

| நாள் | நேரம் | இடம் |
|---|---|---|
| டிசம்பர் 26,27,28 வியாழன், வெள்ளி, சனி | தினமும் மாலை 6 மணி | சி.ஐ.ஜி. ஆலய மைதானம் ஆப்பகூடல், ஈரோடு. |




**தேவசெய்தி & ஜெபம்**

## ஏ.எஸ்.வி. ராபின்
## பொற்செல்வி ராபின்

உயிர்ப்பிக்கும் தேவ செய்திகள், விடுதலை தரும் ஜெபம், ஜாதி,மத பேதமின்றி கர்த்தர் இயேசு தரும் ஆசீர்வாதம் பெற... அன்போடு அழைக்கும் **போதகர், மற்றும் சபையார்.**

Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2012 - 2014
தனிப்பிரதி ரூ. 4/- ஆண்டு சந்தா - ரூ. 40/-



# கோவையில்
# இயேசுவின் சமாதானம் பரவசப் பெருவிழா

ஜனவரி 4,5,
நாள்
சனி, ஞாயிறு

தினமும்
மாலை 5.30 மணி

வ.உ.சி. கைத்தறி மைதானம்,
பார்க்கேட் சிக்னல்,
நஞ்சப்பாரோடு, கோவை.



**தேவசெய்தி & ஜெபம்**

## ஏ.எஸ்.வி. ராபின்
## பொற்செல்வி ராபின்



**சிறப்பு சாட்சிகள்**





## ராமராஜன் (Ex நடிகர்)
## ஆனந்த்பாபு (நடிகர் நாகேஷ் மகன்)

* இனிமையான பரவச பாடல்கள்.
* உள்ளத்தை தொடும் சிறப்பு சாட்சிகள்
* உங்களை உயிர்ப்பிக்கும் தேவ செய்திகள்.
* பாவம், சாபம், நோய், பில்லி சூனியத்திலிருந்து விடுதலை தரும் ஜெபம்
* இயேசுவின் சமாதானம் பெற ஜாதிமத பேதமின்றி உங்களை அன்போடு அழைக்கும்

இயேசுவின் சமாதானம். கோவை. இந்தியா.

**சிறப்பு பாடல்கள்**

## ராஜ்லின்ட் ராபின்





தமிழன் டி.வி.யில்

பரவச நேரம்

காலை 7.15

இமயம் டி.வி.யில்

டிசம்பர் 10 24 திங்கள்

ஒவ்வொரு 2வது, 4வது திங்கட்கிழமைகளிலும்

ஒவ்வொரு 2வது, 4வது செவ்வாய்க்கிழமைகளிலும்

டிசமபர் 11 25 செவ்வாய்



Owned & Published By A.S.V. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Angel Print Systems, 818-Main Sathy Road, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN